**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**M.C.O.P 598 OF 2022**
**Deposition of Witness for : PW.1**

| | | |
|---|---|---|
| Name | : | சுதா |
| Husband's Name | : | ஏழுமலை |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.12.2023

**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு திருமணம் 21.06.2002ல் ஆனது. திருமணத்தின்போது எனக்கு 19 வயது ஆகும். கரும்பு வெட்டும் வேலை மாதத்தில் 10 நாட்கள் மட்டுமே கிடைக்கும் என்று சொன்னால் சரியல்ல. வருடத்தில் 4 மாதங்கள் மட்டுமே கரும்பு வெட்டும் வேலை இருக்கும் என்றால் சரியல்ல. என் கணவருக்கு மாதம் 10 ஆயிரம் ரூபாய் வருமானம் இல்லை என்றும் நான் வருமானம் 50 ஆயிரம் வந்தது என்று மிகைப்படுத்த சொல்கின்றேன் என்றால் சரியல்ல. என்னிடம் 60 சென்ட் இருப்பதற்கான கிரையப்பத்திரம் உள்ளது. அந்த கிரையப்பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. போக்கிய பத்திரம் எதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் உள்ளது என்னால் தாக்கல் செய்யமுடியும். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்து நடந்ததாக சொல்லப்படும் நாள் தீபாவளிக்கு மறுநாள் என்று சொன்னால் சரிதான். விபத்து அன்று குணசேகரனுக்கு உடம்பு

சரியல்லை என்பதால் என் கணவரை மருத்துவமணைக்கு குணசேகரனை அழைத்து செல்ல அழைத்தார்கள் ஆகவே மருத்துவமணைக்கு சென்று வரும் வழியில் விபத்து ஏற்பட்டது. குணசேகரனக்கு வைத்தியம் பார்க்கப்பட்டதா என்றால் மாத்திரை மட்டும கொடுத்தார்கள். மருத்துவமணையில் குணசேகரனுக்கு மருத்துவ ரசீது ஏதும்கொடுக்கவில்லை. மருத்துவமணைக்கு குணசேகரணை நான் சொல்வது போல் அழைத்து சென்றிருந்தால் அவருக்கு மருத்துவ ரசீது கொடுக்கப்பப்பட்டிருக்கும் என்றும் அவ்வாறு எனது கணவர் அழைத்து செல்லததால் தான் மருத்துவ ரசீது கொடுக்கவில்லை என்று பொய் சொல்கின்றேன் என்றால் சரியல்ல. கொட்டையூர் கிராமம் வானாபுரத்திற்கு தென்மேற்கு பகுதியில் உள்ளது அந்த கொட்டையூர் கிராமத்தில் இருந்து குங்கிலி கிராமத்திற்கு வந்து தான் வானாபுரம் கிராமத்திற்கு வரமுடியும் என்றால் சரிதான். வானாபுரம் நேர்கிழக்கில் அத்திப்பாடி கிராமம் உள்ளது என்றால் சரிதான். நான் இந்த விபத்தை பற்றி கேள்வியுற்ற போது நேரம் சுமார் 10.30 மணி இருக்கும். என்னை எங்கள் வீட்டிலிருந்து வானாபுரம் மருத்துவமணைக்கு அழைத்து சென்றார்கள். வானாபுரம் மருத்துவமணையில் வைத்து என் கணவரை பார்த்தேன். விபத்து நடந்த போது சுமார் காலை 9.00 மணி இருக்கும் என்று சொன்னால் 9.00 மணிக்கு மேல் இருக்கம். நான் மருத்துவமணை செல்கின்ற வரை என் கணவர் மருத்துவமணையில் தான் இருந்தார். என் கணவர் மருத்துவமணை பென்ஜில் படுத்திருந்தார். என் கணவர் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ரசீது கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் சொல்வது போல் என் கணவர் மருத்துவ சிகிச்சை பெற்றி இருப்பாரேயானால் அவருக்கு அங்கு மருத்துவ ரசீது வழங்கப்பட்டிருக்கும் என்றும் என் கணவர் சிகிச்சை பெறததால்தான் மருத்துவ சீட்டு கொடுக்கவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. என் கணவர் சிகிச்சை பெற்றதாக சொல்லப்படும் வானாபுரம் ஆரம்ப சுகாதார நிலைத்தில் அந்த சமயம் மருத்துவர்கள் இருந்தார்கள். நான் காலை

11.00 மேற்படி மருத்துவமனைக்கு அன்றைய தினம் சென்றேன். நான் மருத்துவமனையில் இருந்து வெளியே வந்த போது மதியம் நேரம் 12.00 மணி இருக்கும். 12 மணிக்கு பிறகு திருவண்ணாமலை G.H.க்கு என் கணவரை TATA Acவண்டியில் படுக்கவைத்து கூட்டி சென்றோம். என் கணவர் நான் சொல்வது போல் வானாபுரம் மருத்துவமனையில் எந்த சிகிச்சையும் பெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திலேயே மணிரத்தினம் சுயநினைவு அற்று இருந்தால் என்றால் எனக்கு தெரியாது அந்த இடத்தில் நான் இல்லை. சுயநினைவு இன்றி கிடந்த விபரம் எனக்கு பின்னிட்டு தெரிய வந்ததா என்றால் இல்லை. என் கணவர் குணசேகரன் அத்திப்பாடி சேர்ந்த செந்தில் குமாரின் டாடா ஏசியில் மணிரத்தினத்தை ஏற்றி முதல் உதவி சிகிச்சைக்காக ஆரம்ப நிலையத்தில் சேர்த்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவரோ உடன் வந்த குணசேகரனுக்கோ மருத்துவமனையில் வைத்து எந்த சிகிச்சையும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. குணசேகரனுக்கு எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். என் கணவருக்கு குடிப்பழக்கம் உண்டா என்றால் இல்லை. குணசேகரனுக்கும் குடிப்பழ்க்கம் இல்லை. குணசேகரனும் என் கணவரும் தீபாவளிக்கு மறுநாள் அத்திப்பாடி கிராமத்தில் உள்ள டாஸ்மாஸ்க் கடையில் திருட்டு சரக்கு வாங்கி குடித்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு குடித்துவிட்டு என் கணவர் இருசக்கர வாகனத்தை ஓட்டினார் என்றும் குணசேகரன் அவர் பின்னால் அமர்ந்திருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. போதையில் வலதுப்பக்கம் திருப்பி எதிரில் வந்த மணிரத்தினத்தை என் கணவர் இருசக்கர வாகனத்தில் இடித்துவிட்டார் என்றால் சரியல்ல. மணிரத்தினத்திற்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது. மணிரத்தினத்தை என் கணவர் இருசக்கர வாகனத்தில் இடித்து விட்டு மணிரத்தினம் மயங்கி விட்டதால் என் கணவரும் குணசேகரனும் மணிரத்தினத்தை மருத்துவமனையில் அட்மிட் செய்தார்கள் என்றால் சரியல்ல. மணிரத்தினத்தை என் கணவரும் குணசேகரனும் சேர்ந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல.

அவ்வாறு அனுப்பிவிட்டு ஒத்தவூர் கிராமத்திற்கு என் வீட்டிற்கு என் கணவர் வந்தார் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் கணவரின் குடி போதை தான் காரணம் என்றால் சரியல்ல. என் கணவரின் திருவண்ணாமலை மருத்துவமனை விபத்து பதிவேடை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்துபதிவேட்டில் என் கணவர் மது அருந்தியதாக மருத்துவர்கள் கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் வீட்டிற்கு வந்துஅங்கும் மது அருந்திவிட்டுதான் திருவண்ணாமலை ஜிஎச் வந்தார் என்றால் சரியல்ல. மறு நாள் மாலை 3 மணிக்கு என் கணவர் வேலூர் அடுக்கம்பாறையில் இறந்தார் என்றால் சரியல்ல. என் கணவரின் பிரேத விசாரணை அறிக்கையில் அவர் மது அருந்தியிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தால் சரியல்ல. என் கணவர் போதையில் இருந்தது மற்றும் உடனே சிகிச்சை பெறாதது தான் அவரின் உயிர் இழப்பிற்கு காரணம் என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக என் கணவர் மீது மு.த.அ போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மு.த.அ. தவறு என்று சொல்லி 1 மாதம் 7 நாள் கழித்து தான் காவல் ஆய்வாளரிடம் மனு அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல. இதுநாள் வரை என் கணவர் மீதான மு.த.அ ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். யாரோ எனக்கு தவறாக வழிகாட்டியதின் பேரில் போலிசாரை 1 மாதம் 7 நாள் கழித்து தவறான இழப்பீடு பெறும் நோக்கில் இந்த மு.த.அ மாற்றம் செய்ய மனு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மணிரத்தினம் என் கணவர் மற்றும் சோழமண்டலம் இன்சூரன்ஸ் கம்பெனி மீது இழப்பீடு வழக்கு போட்டு நிவாரணம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. என் கணவர் இறந்ததால் குணசேகரனிடம் ரூ.5 லட்சம் நான் இழப்பீடு வாங்கினேன் என்றால் சரியல்ல. என் கணவருடன் குணசேகரன் மது அருந்த சென்றததால் தான் குணசேகரனை மிரட்டி ரூ.5 லட்சம் பணம் பெற்றதோடு அல்லாமல் அவரை

மிரட்டி சாட்சியம் சொல்ல அழைத்து வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றும் அதை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**/உண்மை நகல்/**

ஒப்பம்/–P.மதுசூதனன்,
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திருவண்ணாமலை.**